JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-5 Witness
for Prosecution

| CC.No. | 190/2025 | Crime No. | 313/2024 | Station | Ammapet |
|---|---|---|---|---|---|

| Name | **Pw-5-பாலகிருஷ்ணன்** | Village |
|---|---|---|
| Father's Name/Husband's Name | | Taluk |
| Age | | Calling |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 25th day of February 2026 | | |

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது காடப்பநல்லூரில் குடியிருந்து கொண்டு, AC மெக்கானிக்காக வேலை செய்து வருகிறேன். கடந்த 3 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் காலை 08.45 மணிக்கு நான் காடப்பநல்லூரிலிருந்து டீ குடிப்பதற்காக மாணிக்கம்பாளையம் அம்மு பேக்கரிக்கு சென்று இருந்தேன். அப்பொழுது பழனிச்சாமி என்பவருக்கு விபத்து ஏற்பட்டு சாலையில் கீழே கிடந்தார். அவரை நான் தூக்கி உட்கார வைத்து ஆம்புலன்ஸை வரவழைத்துமருத்துவமனைக்குஅனுப்பி வைத்தேன் . விபத்து குறித்து நான் எதுவும் விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை. பின்னர் ஒரு அரை மணி நேரம் கழித்து நான் வேலைக்கு செல்வதற்காக விபத்து நடந்த இடம் வழியாக சென்றேன். போலீசார் விபத்து நடந்த இடத்திற்கு வந்ததற்காக கையெழுத்து வேண்டும் என்று கேட்டார்கள். போட்டுக் கொடுத்தேன். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்க நடந்து விவரங்களை சொன்னேன்.

**சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை மேற்கொள்ள நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை—**

கடந்த 08.07.2024 ஆம் தேதி, காலை 09.40 மணிக்கு நானும், எனது நண்பர் மூர்த்தி என்பவரும் சாய் கார் கேர் கம்பெனி அருகில் சொந்த வேலையாக வந்து மெயின் ரோட்டை பார்த்தவாறு நின்று கொண்டிருந்தோம் என்றும் அப்போது பின்னர் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த மேட்டூர், குமரன் நகரை சேர்ந்த ஜெயராஜ் மகன் அகிராஜ் என்பவர் அம்மாபேட்டை – பவானி மெயின் ரோட்டில் TN 93, 7455 என்ற பதிவு எண் கொண்ட இமாலயன் ராயல் என்பீல்ட் இருசக்கர வாகனத்தில்

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.02.25 06:54:35 +0530

வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்து கொண்டிருந்தார் என்றும் அப்போது அதே ரோட்டில் கிழப்புற ஓரமாக ராங் சைடில் அகிராஜுக்கு எதிராக பின்னர் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த காடப்பநல்லூரை சேர்ந்த முத்துசாமி மகன் பழனிசாமி என்பவர் TN 77x X 9556 என்ற பதிவு எண் கொண்ட TVS ஜூபிடர் வாகனத்தை அதிவேகமாகவும், தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்தவரை பார்த்து அகிராஜ் ஹாரன் அடித்தும் அதை கவனிக்காமல் எவ்வித சிக்னலும் செய்யாமல் மாணிக்கம்பாளையம் பிரிவு வீரமாத்தி சாம்பர் அருகே திடீரென்று மேற்கு நோக்கி திருப்பி அகிராஜ் ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தினார் என்றும் மோட்டார் சைக்கிளில் மோதியதும் அகிராஜ் மோட்டார் சைக்கிளுடன் தார் ரோட்டில் கீழே விழுந்துவிட்டார் என்றும் அவர் கீழே விழுந்து கிடந்ததை பார்த்த நாங்களும் மற்றவர்களும் தூக்கி உட்கார வைத்து பார்த்தபோது அகிராஜுக்கு வலது தோள்பட்டை, இடது கை ஆள்காட்டி விரல், வலது கால், இடது கால் மூட்டி, வலது கை மணிக்கட்டு, இரு கெண்டைக்கால்களிலும் மற்றும் இரு கால் பாதங்களிலும் காயங்கள் ஏற்பட்டிருந்தது என்றும் போலீசார் விசாரணையின்போது சொல்லிவிட்டு, தற்போது எதிரி கேட்டுக் கொண்டதற்காக உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.02.25 06:54:41 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani

JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW-   - Pw-6  Witness
for Prosecution

| CC.No. | 190/2025 | Crime No. | 313/2024 | Station | Ammapet |
|---|---|---|---|---|---|

| Name | **Pw-6- சின்னசாமி** | Village | |
|---|---|---|---|
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 25th day of February 2026 | | | |

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது காடப்பநல்லூரில் குடியிருந்து கொண்டு, விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 3 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் நான் எனது தோட்டத்தில் வேலை செய்துவிட்டு மாணிக்கம்பாளையம் பிரிவிற்கு அருகில் உள்ள அம்மு பேக்கரிக்கு காலை 08:30 – 9:00 மணிக்கு டீ குடிப்பதற்காக சென்றேன். அப்பொழுது போலீசார் வந்து கையெழுத்து கேட்டார்கள். நான் போட மறுத்தேன். போலீசார் அங்கு வந்ததற்காக சாட்சி கையொப்பம் கேட்டார்கள். நானும், பொன்னுசாமி என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை மேற்கொள்ள நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

கடந்த 08.07. 2024 ஆம் தேதி, மாலை நான் மாணிக்கம்பாளையம் பிரிவின் அருகில் வந்தபோது அம்மாபேட்டை காவல் நிலைய போலீசார்கள் வந்து வீரமாத்தி சேர்பர் அருகில் விசாரித்துக் கொண்டிருந்தார் என்றும் அதை பார்த்து நானும் போய் விசாரிக்க பின்னர் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த மேட்டூர், குமரன் நகரை சேர்ந்த அகிராஜ் என்பவர் அம்மாபேட்டை – பவானி மெயின் ரோட்டில் TN 9345 என்ற பதிவு எண் கொண்ட இமாலயன் ராயல் என்பீல்ட் இருசக்கர வாகனத்தில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி ஓட்டிக்கொண்டு வந்தபோது அதே ரோட்டில் கிழப்புற ஓரமாக ராங்

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.02.25 06:54:48 +0530

சைடில் அகிராஜுக்கு எதிராக பழனிச்சாமி என்பவர் TN 77 X 9556 என்ற பதிவு எண் கொண்ட TVS Jupiter வண்டியை அதிவேகமாகவும், தெற்கிலிருந்து வடக்கு நோக்கி ஓட்டி வந்தவரை பார்த்து அகிராஜ் ஹாரன் அடித்தும் அதை கவனிக்காமல் எவ்வித சிக்னலும் செய்யாமல் மாணிக்கம்பாளையம் பிரிவு வீரமாத்தி சேம்பர் அருகே திடீரென்று மேற்கு நோக்கி திருப்பி ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தினார் என்றும் அது சம்பந்தமாக காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் சம்பவயிடத்தினை பார்வையிட வந்து இருப்பதாகவும் என்னை சாட்சியாக இருக்க கேட்டுக் கொண்டார் என்றும் பின்னர் மாலை 05.00 மணிக்கு போலீசார் சம்பவயிடத்தை பார்வையிட்டு படம் வரைந்து எழுதிக் கொண்டார் என்றும் அதற்கு சாட்சியாக நானும், பொன்னுசாமி என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம் என்றும் போலீசார் விசாரணையின்போது சொல்லிவிட்டு தற்போது எதிரி கேட்டுக் கொண்டதற்காக உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court

readover to the witness in the presence

of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.02.25 06:54:55 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani